சுருக்கம்

தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939 – திரைப்படங்கள் – கேளிக்கை வரி விலக்களிக்க அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையை ஏற்று "காந்தர்வன்" தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்கு கோரிக்கை நிராகரித்து – ஆணை –வெளியிடப்படுகிறது.

---

வணிகவரி மற்றும் பதிவுத் (சி1) துறை

அரசாணை (டி) எண். 146 | நாள்: 01.04.2014
விஜய, பங்குனி, 18
திருவள்ளுவர் ஆண்டு, 2045

11336

படிக்கப்பட்டது:–

அரசாணை (நிலை) எண்.89, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 21.7.2011.
அரசாணை (நிலை) எண்.2, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 03.1.2012.
வணிகவரி ஆணையர் கடிதம் எண். சட்டக்குழு–4/1150/2014, நாள் 27.01.2014
தேர்வுக்குழு எண்.115/2013–2014.

-----

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் கீழ் கேளிக்கை வரிச்சலுகை பெற திரைப்படங்களுக்கு தமிழில் பெயர் சூட்டப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் சில கூடுதல் தகுதி வரையறைகளை நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டது. மேலும் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்கின்ற திரைப்படங்களை பார்வையிட்டு வரிவிலக்கிற்கு பரிந்துரை செய்ய இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஏழு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு தேர்வுக்குழு அமைத்து ஆணை வெளியிடப்பட்டது.

2. முதன்மைச்செயலர் / வணிகவரி ஆணையர், மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், மேற்கண்ட குழு "காந்தர்வன்" திரைப்படத்தை முழுமையாக பார்வையிட்டு, பார்வையிட்ட ஆறு உறுப்பினர்களில், அலுவல் சாரா உறுப்பினர் திரு.பாபு என்கிற N.V.அனந்தகிருஷ்ணன், ஒளிப்பதிவாளர் அவர்கள் இத்திரைப்படம் கேளிக்கை வரிவிலக்கிற்கு தகுதியானது எனவும், அலுவல் சாரா உறுப்பினர் செல்வி L.R. ஈஸ்வரி, பின்னணிப் பாடகி அவர்கள், படிவம் 'இ'–ல் தகுதியானது அல்ல என பரிந்துரை செய்ய ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தில் குறிப்புகளை மட்டுமே பதிவு செய்துள்ளார் எனவும், இதர நான்கு உறுப்பினர்களும் "காந்தர்வன்" என்ற திரைப்படம் கேளிக்கை விலக்கு அளிப்பதற்கு தகுதியானது அல்ல என பரிந்துரை செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

3. "காந்தர்வன்" தமிழ் திரைப்படத்தை பார்வையிட்ட தேர்வுக்குழு உறுப்பினர்களின் பரிந்துரைகள் பின்வருமாறு :–

| வ. எண் | உறுப்பினர் திரு/திருமதி | பரிந்துரை |
|---|---|---|
| 1. | D. ரமாதேவி, இணை ஆணையர் (வணிகவரி) , (கணினி மையம்) சென்னை –6. | திரைப்படத்திற்கு 'U' சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது என்றாலும், திரைப்படத்தின் தலைப்பு தமிழ் சொல்லாக தெரியவில்லை என்பதாலும், திரைப்படம் |

| | | |
|---|---|---|
| | | முழுவதும் வன்முறை மற்றும் அருவருக்கத்தக்க வசனமுமாக உள்ளது என்பதாலும், திரைக்கதையின் கரு தமிழ் மொழி பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் பாதிப்பதாக உள்ளது என்பதாலும், இத்திரைப்படம் வரி விலக்கிற்கு தகுதியானது இல்லை என பரிந்துரை செய்துள்ளார். |
| 2. | வே.கூழுச்சாமி,<br>துணை செயலாளர்,<br>தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை | திரைப்படத்திற்கு 'U' சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது என்றாலும், "காந்தர்வன்" என்பது தமிழ் மொழி பெயர் இல்லை என்பதாலும், இப்படத்தின் கருவானது தமிழ் மொழிக்கும், பண்பாட்டிற்கும் உகந்ததாக இல்லை என்பதாலும், இப்படத்திற்கு வரி விலக்கு அளிக்க வேண்டாம் என பரிந்துரை செய்துள்ளார். |
| 3. | பாபு என்கின்ற N.V.அனந்தகிருஷ்ணன்,<br>ஒளிப்பதிவாளர் | 'U' சான்றிதழ் பெற்ற திரைப்படம் என்பதாலும், திரைப்படத்தில் ஆபாசம் மற்றும் வன்முறை இல்லை என்பதாலும், திரைப்படத்தில் தமிழ்மொழி சம்மந்தப்பட்ட பிரச்சனைகள் எதுவும் இல்லை என்பதாலும், நிபந்தனைக்குள் உட்பட்டுள்ளதாலும், இப்படம் கேளிக்கை வரி விலக்கிற்கு தகுதியானது என பரிந்துரை செய்துள்ளார். |
| 4. | V.S. ராகவன்,<br>பழம் பெரும் நடிகை | திரைப்படத்தில் சண்டைக் காட்சிகளில் வன்முறை அதிகமாயிருந்தாலும், ஆபாச நடனம் ஒன்று இருப்பதாலும், இதையெல்லாம் மறக்கடிக்கிற மாதிரி இந்தப்படத்தின் தலைப்பு தமிழ் சொல் இல்லை என்ற ஒரு முக்கிய காரணத்தினால் இந்தப் படம் கேளிக்கை வரி விலக்கிற்கு தகுதியற்றது என பரிந்துரை செய்துள்ளார். |
| 5. | L.R. ஈஸ்வரி,<br>பின்னணிப் பாடகி | திரைப்படத்தில் அருவருக்கத்தக்க காட்சிகள் நிறைய இருக்கிறது, நாட்டிற்கு எது தேவையோ அது எதுவும் இல்லை, கெட்டு போவதற்கு எடுத்துக்காட்டாக நிறை காட்சிகள் இருக்கிறது, திரைப்படத்தின் தலைப்பே தமிழில் இல்லை என குறிப்பிட்டுள்ளார். |

| | | |
|---|---|---|
| 6. | M.N. ராஜம்,<br>பழம் பெரும் நடிகை | திரைப்படம் 'U' சான்றிதழ் பெற்றுள்ளது என்றாலும், திரைப்படத்தில் ஆபாசம் மற்றும் வன்முறை இல்லை என்றாலும், திரைப்படத்தின் பெயர் தமிழ் பெயர் கொண்டதாக தெரியவில்லை என்பதாலும், பெண்களுக்கு மரியாதையான வசனம் இல்லை என்பதாலும், காதல் என்ற பெயரால் அடிப்பதும் கேவலமாக திட்டுவதும் அதிகமாக உள்ளது என்பதாலும், வரி விலக்கு அளிக்க தகுதியான படம் இல்லை என பரிந்துரை செய்துள்ளார். |

4. மேற்கண்ட தேர்வுக்குழு உறுப்பினர்களின் பரிந்துரைகளை ஆய்வு செய்ததில், "காந்தர்வன்" தமிழ் திரைப்படத்தை பார்வையிட்ட ஆறு உறுப்பினர்களில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் இத்திரைப்படத்திற்கு கேளிக்கை வரிவிலக்கு அளிப்பதற்கு பரிந்துரை செய்யவில்லை என்பதாலும், அரசாணை நிலை எண்.89, வணிகவரி மற்றும் பதிவு (சி1) துறை, நாள் 21.7.2011–ல் நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதி வரையறைகளை இத்திரைப்படம் பூர்த்தி செய்யவில்லை என்பதாலும், தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் கீழ் "காந்தர்வன்" தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்கு அளிக்க இயலாது என அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ்.கே. பிரபாகர்,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
முதன்மைச் செயலாளர் / வணிகவரி ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5.
செயலாளர், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, சென்னை–9.
இயக்குநர், தமிழ்வளர்ச்சி துறை, சென்னை–8.
சம்பந்தப்பட்ட படத்தயாரிப்பாளர்.
நகல்:
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
சிறப்பு நிலை நேர்முக உதவியாளர், அமைச்சர் (வணிகவரி மற்றும் பதிவு) அலுவலகம், சென்னை–9.
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.